# சிறப்பு சார்பு நீதிமன்றம் (LAOP) எண்.2 , ஜெயங்கொண்டம்

அசல் வழக்கு எண்.100/2026

நாள்: 20.07.2026

பி.வா.சா.1 – வேல்முருகன்

2026–ம் ஆண்டு ஜுலை 20–ம் நாள் (1969–ம் ஆண்டு 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு.தனஞ்செயன், கிரேடு–II பெஞ்ச் கிளர்க் அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.

## வாதி தரப்பு குறுக்கு விசாரணை

நான் தே.மு.தி.க கட்சியின் ஆண்டிமடம் ஒன்றிய செயலாளர் என்றால் சரிதான். நான் ஆண்டிமடத்தில் இறைச்சி கடை வைத்துள்ளேன் என்றால் சரிதான். என் மனைவி பெயர் கமலம். நானும் என் மனைவியும் ஒரே வீட்டில் ஒற்றுமையாக தான் வாழ்ந்து வருகிறோம் என்றால் சரிதான். எனக்கு வாதி ஒரு நோட்டிஸ் கொடுத்தார் என்றால் சரிதான். அதை நான் பெற்றுக்கொள்ளவில்லை என்றாலும் எனது மனைவி வாங்கினார் என்றாலும் சரிதான். அந்த அறிவிப்பை என் மனைவி என்னிடம் கொடுத்துவிட்டார் என்றால் சரிதான். மேற்படி அறிவிப்பில் வாதியிடம் நான் ரூ.3 லட்சம் பணம் பெற்றுக்கொண்டது சம்மந்தமாகவும் பணத்தை திருப்பி கொடுக்குமாறும் சொல்லப்பட்டிருந்தது என்றால் சரிதான். அந்த அறிவிப்பிற்கு நான் பதில் அறிவிப்பு கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. எனது வழக்கறிஞர் மூலம் கொடுத்துள்ளேன். நான் கொடுத்த பதில் அறிவிப்பை தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.1–ல் உள்ள கையெழுத்து என்னுடையதா என்றால் இல்லை. எதிர் வழக்குரையில் உள்ள கையெழுத்து என்னுடையதா என்றால் சாட்சி இல்லை என்று சொல்லிவிட்டு மீண்டும் என்னுடைய கையெழுத்து என்று கூறினார். வக்காலத்தில் உள்ள கையெழுத்து என்னுடைய கையெழுத்தா என்றால் இல்லை. முதல் விசாரணை வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடைய கையெழுத்தா என்றால் சரிதான்.

வா.சா.ஆ.1—ல் கையெழுத்திற்கும் எதிர்வழக்குரையில் உள்ள கையெழுத்திற்கும் என்ன வேறுபாடு உள்ளது என்றால் வா.சா.ஆ.1—ல் கையெழுத்து வேறுபாடு உள்ளது. வா.சா.ஆ.1—ல் கையெழுத்திற்கும் வக்காலத்தில் உள்ள கையெழுத்திற்கும் என்ன வேறுபாடு உள்ளது என்றால் வா.சா.ஆ.1—ல் உள்ள கையெழுத்து என்னுடையதல்ல. வா.சா.ஆ.1—ல் சாட்சி கையொப்பம் செய்த முருகவேல், ஆரோக்கியசாமி, எழுத்துக்காரர் லெனிஸ்பிரியா ஆகியோர்களுக்கும் எனக்கும் முன்விரோதம் உள்ளதா என்றால் அவர்கள் யார் என்று தெரியாது. அடைக்கலசாமி மகன் ஆரோக்கியசாமியை எனக்கு தெரியாது. அவர் கூவத்தூரா என்றால் தெரியாது.

திறந்த நீதிமன்றத்தில் வைத்து சாட்சி சொன்னவை என்னால் தட்டச்சருக்கு திருப்பி சொல்லப்பட்டு அவரால் தட்டச்சிடப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டி அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு கையெழுத்திடப்பட்டது.

/ ஒப்பம் / V. பிரேம்குமார்,
சிறப்பு நீதிபதி எண்.2,
ஜெயங்கொண்டம்.